Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.
**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 9 (L.W. 13 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.அருண்குமார்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 12.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். 29.05.2022 தேதி நான் 9 மணியளவில் கந்தசாமியை குபேந்திரன் வெட்டி விட்டதாக தகவல் கேள்விபட்டேன். பின்பு கோவள்ளிகோம்பை பேருந்து நிறுத்தத்தில்

போலிசார் இருந்தார்கள். சம்பவ இடம் குறித்து படம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் அதில் நானும், நாகேந்திரனும் சாட்சி கையெழுத்து போட்டோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பிறகு 9, 10 மணிக்கு அந்த இடத்தில் இருந்த ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண். புளூ கலர் ஸ்கூட்டி, செருப்பு ஒன்று, பால்கேன் ஒன்று ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்கள், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், நாகேந்திரனும் சாட்சி கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆகவும், ரத்தம் படிந்த மண் **சா.பொ.2** ஆகவும், ரத்தம் படியாத மண் **சா.பொ.3** ஆகவும், புளூ கலர் ஸ்கூட்டி **சா.பொ.4** ஆகவும், செருப்பு ஒன்று **சா.பொ.5** ஆகவும், பால்கேன் ஒன்று **சா.பொ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

என்னுடைய வீடு கோவள்ளிகோம்பையில் உள்ளது. என்னுடைய வீடு கந்தசாமியின் வீட்டை தான் உள்ளது. பஸ் ஸ்டாப்பிலிருந்து என் வீடு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. நான் 07.00மணியளவில் சின்னம்பள்ளிக்கு போனேன். 09.00 மணியளவில் தகவல் கிடைத்தது. சின்னம்பள்ளிக்கு போகும் வழியில் தான் பஸ்ஸ்டாப் உள்ளது. நான் காலை 07.00 மணிக்கு போகும் போது பஸ் ஸ்டாப்பில் பிரேதம்

எதுவும் இல்லை. நான் போலீஸ் விசாரணையில் 06.00 மணியளவில் கந்தசாமி இறந்து விட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 09,00மணிக்கு சம்பவ இடத்திற்கு போனேன். சம்பவ இடத்தில் 30, 40 பேர் இருந்தார்கள். பிரேதம் அங்கு தான் இருந்தது. பிரேதம் எந்த திசையில் இருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை.

2) பால் கேனில் பால் இருந்ததா என்றால் பால் இல்லை. பால் கேன் கீழே சரிந்து இருந்தது. பால் கீழே கொட்டி இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. ஸ்கூட்டி கீழே விழுந்து கிடந்தது. வண்டி கீழே விழுந்து ரன்னிங்கில் இருந்ததா அல்லது எப்படி இருந்தது என்று எனக்கு தெரியவில்லை. பிரேதம் 11.00, 12.00 மணியளவில் எடுத்து செல்லப்பட்டது.

3) நான் சம்பவ இடம் போகவில்லை என்றாலும், நான் எதுவும் பார்க்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.
Additional District Judge,
Dharmapuri.